சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.02.06.2026.
OS.No. 113/2018
PW1 : இளங்கோவன் (வயது 50 ) த/பெ. முத்தண்ணா
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**1,2 பிரதிவாதிகள் தரப்பு கு.வி**

நான் பிரதிவாதியிடம் கிரயம் பேசியதாக கூறியுள்ளேன் என்றும் எந்த வருடம் கிரயம் பேசினேன் என்றால் 2012 ஆம் வருடம் நவம்பர் மாதம். நான் கிரயம் பேசவில்லை அவர்களாக வந்து அந்த இடத்தை வைத்துக்கொள்ளுமாறு சொன்னார்கள். எத்தனை நபர்கள் என்னிடம் வந்து அவ்வாறு இடத்தை வைத்துக்கொள்ளுமாறு சொன்னார்கள் என்றால் அப்பாஸ் மந்திரி, தர்மராஜ், ராதாகிருஷ்ணன். அப்பாஸ் மந்திரிக்கு தர்மராஜ் மற்றும் ராதாகிருஷ்ணன் நண்பர்களா என்றால் இல்லை, ஒரே ஊரை சேர்ந்தவர்கள். மேற்படி மூவரும் என்னை இலால்குடியில் வந்து சந்தித்தார்கள்.

மேற்படி மூவரும் என்னிடம் கேட்டபோது, நான் அதற்கு மறுத்துவிட்டேன் என்னிடம் நிறைய இடம் இருக்கிறது என்று கூறிவிட்டேன். அப்பாஸ் மந்திரி என்னிடம் அவரது குடும்ப சூழ்நிலையை கூறி வற்புறுத்தியதால் நான் கிரயம் வாங்க ஒப்புக்கொண்டேன். அவ்வாறு கிரயம் செய்து கொள்ள ஒப்புக்கொண்ட உடன் வழக்கு சொத்தின் மூல ஆவணத்தை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன்.

என்ன ஆவணம் என்றால் செல்லதுரை என்பவரிடமிருந்து அப்பாஸ் மந்திரி ரூ.30,000/-க்கு கிரயம் வாங்கியிருந்த பத்திரத்தை என்னிடம் காட்டினார். அதற்கு நான் அந்த சொத்தை ரூ.1 லட்சத்திற்கு வாங்க சம்மதித்தேன். அப்பாஸ் மந்திரி எந்த தேதியில் செல்லதுரை என்பவரிடமிருந்து தாவா சொத்தை கிரயம் வாங்கியிருந்தார் என்றால் தெரியாது.

சொத்தை கிரயம் வாங்குவதற்கு முன்பு வில்லங்கம் பார்த்தேனா என்றால் இல்லை. மூல ஆவணத்தின் நகலை நான் வாங்கினேனா என்றால் வாங்கவில்லை. படித்து மட்டும் பார்த்தேன். நான் கிரயம் வாங்கியதாக கூறுவதே பொய்யானது

என்றும், எந்த ஒரு மூல பத்திரத்தையும் வாங்கி பார்க்கவில்லை என்றும், வழக்கிற்காக அதனை பற்றி பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 கிரய ஒப்பந்த பத்திர ஆவணம் வாங்கியது 24.09.2012 என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.5 கிரய ஒப்பந்தம் பத்திரம் வாங்கிய தேதியிலிருந்து கிரய ஒப்பந்தம் ஏற்பட்டதாக சொல்லப்படும் தேதி வரை எழுதாத வெற்று பத்திரம் எனது கைவசம் இருந்ததா என்றால் ஆமாம் என்னிடம் தான் இருந்தது. பின்னிட்டு சாட்சி கேள்வியை திரும்ப கேட்டுவிட்டு வெற்று பத்திரம் என் வசம் இல்லை என்று கூறுகிறார்.

நான் கூறுவது தவறு என்றும், எனது பெயரில் கடந்த 24.09.2012 ஆம் தேதியன்று வாங்கப்பட்ட பத்திரம் கிரய ஒப்பந்தம் ஏற்பட்டதாக சொல்லப்படும் தேதி வரை மேற்படி பத்திரம் வாங்கிய நபரான எனது வசம் மட்டுமே இருந்திருக்க வாய்ப்புள்ளது என்றும் அதனை தற்போது வழக்கிற்காக மறுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் வழக்கு சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் ஏற்கனவே வா.சா.ஆ.5 பத்திரத்தை எனது பெயரில் முன்னேற்பாடாக வாங்கி வைத்து பின்னிட்டு உடன்படிக்கை செய்து கொண்டதாக ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணம் ஏற்பட்டதாக சொல்லப்படும் தேதியில் நான் இலால்குடி, திருவள்ளுவர் நகரில் பணி புரிந்து வந்தேன். அங்கு தான் வந்து என்னை 1 ஆம் பிரதிவாதி பார்த்தார்.

திருவள்ளுவர் நகருக்கும், பத்திரம் பதிவு செய்யும் அலுவலகத்திற்கும் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் 1 கி.மி கூட இருக்காது. வா.சா.ஆ.5 கிரய ஒப்பந்த ஆவணத்தை எழுதியவர் ஞானசேகரன் என்பவரா என்றால் அதை பற்றி தர்மராஜை கேட்டால் தான் தெரியும்.

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 ஆவணத்தில் வரைவு செய்தவர் என்ற இடத்தில் கையொப்பம் மட்டுமே உள்ளது என்றால் சரிதான். முறையாக நான் ஒப்பந்தம்

ஏற்படுத்தியிருந்தால், வரைவு செய்தவர் பெயரும், முகவரியும் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. என்னால் மேற்படி ஆவணம் உருவாக்கப்பட்டு, புனையப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

நான் உண்மையிலேயே, வா.சா.ஆ.5 ஆவணத்தை ஏற்படுத்தியிருந்தால் அதனை 1 கி.மி தொலைவு கூட இல்லாத சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்திருப்பேன் என்றும் நான் தன்னிச்சையாக உருவாக்கிய ஆவணம் என்பதால் அதனை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல.

**<u>கு.வி தொடர்ச்சி</u>** - வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் மறுதேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

/ signed/
இளங்கோவன்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

sd/-Tmt.R.Mohana.,B.L.,
சார்பு நீதிபதி
இலால்குடி